# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 27.12.2022 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் 28.07.2022 முதல் 10.08.2022 வரை மாமல்லபுரத்தில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் தீபம் தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு அமைச்சர்களை அழைத்து நிகழ்ச்சிகளுக்கு நடத்தக்கோரியது கோயம்புத்தூர் மாவட்டத்தில் செஸ் ஒலிம்பியாட் ஜோதியை பெறுதல் மற்றும் 19 மாவட்டங்களுக்கு மாதிரி ஜோதியை ஒப்படைக்கும் விழா முன்னேற்பாட்டிற்கான பணிகள் இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>விழா மேடைக்கு அருகில் அலங்கார வடிவமைப்புகள் அமைத்தல், வாகன ஊர்தி அலங்கார வடிவமைப்புகள் அமைத்தல், வாகன ஊர்தி அலங்காரங்கள், மேடை ஒலிப்பெருக்கிகள், சாலையில் செஸ் போர்டு வண்ணம் தீட்டுதல் செஸ் ஒலிம்பியாட் பணிச்சிற்பம் உருவாக்குதல் ஆகிய வேலைகளை இந்நகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிகளை மேற்கொண்டு அதற்கான செலவுப்பட்டியல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி செலவுத் தொகை ரூ.1,47,122/- Shophic Enterprise என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.1,47,122/- ஐ Shophic Enterprise என்ற நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண் : 4064/2022/இ1<br>தீர்மானம் எண் : 505<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள பொது கழிப்பிடம் (ம) பள்ளிகளில் அதிக அளவில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் உபயோகின்றனர். எனவே பெண்களின் சுகாதாரம் கருதி கழிப்பறைகளில் Destooyer கருவி பொருத்த அறிவுறுத்தியதின் பெயரில் 5 Napkin Destooyer அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தின் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2557/2021/இ1<br>தீர்மானம் எண் : 506<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2022 - 2023ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண் 19009/2022/SBM, நாள்: 25.11.2022னபடி நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Biomining) சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணி செய்தல் பணிக்கு ரூ.118.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மொத்த மதிப்பீடு ரூ.118.00 இலட்சத்தில் மத்திய அரசு மானியம் 50% மாநில அரசு மானியம் 33% நகராட்சி பங்களிப்பு தொகை 17% என நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4823/2022/இ1<br>தீர்மானம் எண் : 507<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT 2022 – 2023)ன் கீழ் கீழ்க்கண்ட பூங்கா மேம்படுத்துதல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து 02.11.2022 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ/ இலட்சத்தில் | KNMT SHARE | AMOUNT 2.0 SHARE |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.8 சக்தி நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல் | ரூ.49.00 இலட்சம் | ரூ.10.00 இலட்சம் | ரூ.38.00 இலட்சம் |
| 2 | வார்டு எண் 28 முல்லை நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல் | ரூ.38.00 இலட்சம் | ரூ.38.00 இலட்சம் | - |

மேற்காணும் பணிகளுக்கு 03.11.2022 அன்று மண்டல செயற்பொறியாளர் - திருப்பூர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 24.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிகளுக்கு 24.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரடியாகவும் மற்றும் இணையதளம் மூலமாகவும் ஒரே ஒப்பந்ததாரர்களின் பெயரில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்காணும் வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளி உறைகளும் தொழில்நுட்பத்தகுதியினை பெற்று 28.11.2022 அன்று விலைப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.8 சக்தி நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல் | ரூ.49.00 இலட்சம் | திருவாளர். V.R.K கன்ஸ்ரக்சன்ஸ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.M.K. செல்வா | 7.55% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண் 28 முல்லை நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்தல் | ரூ.38.00 இலட்சம் | திருவாளர். V.R.K கன்ஸ்ரக்சன்ஸ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.M.K. செல்வா | 8.23% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். V.R.K கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களை விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டு அவர்கள் மதிப்பீட்டிற்கு 0.01% குறைத்து தருவதாக கடிதம் கொடுத்துள்ளார். எனவே, திருவாளர் V.R.K கன்ஸ்ரக்சன்ஸ் அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்
ந.க.எண். 4512/2022/இ1

தீர்மானம் எண் : 508

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் தற்போது வரிவசூல் நடைபெறும் பொருட்டு தற்போது உள்ள டி.வி.எஸ் டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர் இரண்டு எண்கள் உள்ளது. அதில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் வரி வசூல் பாதிக்கப்படுகிறது. ஆதலால் இனி வரும் காலங்களில் வரி வசூல் தீவிரப்படுத்துவதால் பிரிண்டர்கள் பழுதானதை சரி செய்ய காலதாமதம் ஆவதால் புதிகாக இரண்டு எண்கள் பிரிணடர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வரி வசூல் மையம் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று பிரிண்டர் வாங்க மன்றம் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்
   ந.க.எண். 3949/2022/இ1

தீர்மானம் எண் : 509

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

6 மேட்டுப்பாளையம் நகராட்சி UGD திட்டப் பணிக்கு 2 கணினி 1 பிரிண்டர் மற்றும் நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான ஜெராக்ஸ் மிஷின் 1, டோனர் 10 மற்றும் அதற்குத் தேவையான மின் உதிரி பாகங்கள், கேபிள்கள், நெட் ஒர்க் சார்ந்த உபகரணங்கள் வாங்கி இயக்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. கணினி பயன்பாட்டின் அவசியம் அவசரம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்
   ந.க.எண். 3903/2022/இ1

தீர்மானம் எண் : 510

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7. மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக சம்மந்தமாக தினமும் (video Conference) காணொலி நிகழ்ச்சி நடைபெறும் பொருட்டு கணினி அறையின் அருகில் புதியதாக கேமரா கணினி மற்றும் LED தொலைக்காட்சி மற்றும் அதற்கு தேவையான ஒயரிங் மற்றும் அனைத்து உபகரணங்கள் மாற்றி அதற்கு தனியாக அறை அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,20,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்பபடுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. கணினி அறை அவசியம் என்பதால் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்
   ந.க.எண். 4913/2022/இ1

தீர்மானம் எண் : 511

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

8 இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் சொத்துவரி தொழில்வரி குழநீர்கட்டணம் மற்றும் குத்தகை இனங்கள் நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை செலுத்தக் கோரி அனைத்து வரி விதிப்புதாரர்களுக்கும் சென்றடையும் வகையில் ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து விளம்பரம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளின் வரப்பெற்றுள்ளன

| வ. எண் | பெயர் | நாள் ஒன்றுக்கு (ரூ) |
|---|---|---|
| 1 | சி. நடராஜன்<br>74/25 மஜித்வீதி<br>மேட்டுப்பாளையம் | ரூ.2400/- |
| 2 | எம். வசந்தகுமார்<br>14 பாரதியார் சந்து<br>மேட்டுப்பாளையம் | ரூ.2500/- |
| 3 | முகமது அப்பாஸ்<br>53 எல்.எஸ்.புரம்<br>மேட்டுப்பாளையம் | ரூ.2600/- |

மேற்கண்டவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.சி.நடராஜன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

வரி வசூல் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.சி.நடராஜன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்
ந.க.எண். 1751/2022/அ2

தீர்மானம் எண் : 512

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

9 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதியின் கீழ் 2022 -2023 ன் கீழ்க்கண்ட பணிக்கு 13.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்ச்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 5 பொது கழிப்பிடம் (ம) பள்ளிகளில் Napkin எரியூட்டும் இயந்திரம் | ரூ.2.50 இலட்சம் | திருவாளர். AKD Enterprise | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். UTHSEV TRADERS | 4.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்க்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தரப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் AKD Enterprise அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண். 2557/2021/இ1

தீர்மானம் எண் : 513

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

10 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான கீழ் கண்ட கடைக்கு அரசு ஆணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 ன்படி உரிமம் பெயர் மாற்றம் செய்து தர கோரியுள்ளார்.

| வ. எண் | கடை விவரம் | தற்போது உள்ள கடை உரிமதாரர் | பெயர் மாற்றம் செய்து தர கோரும் நபர் |
|---|---|---|---|
| 1 | அண்ணா தினசரி மார்கெட் க.எண்18 | திரு.கே.மணி | திரு.தினேஷ் |

எனவே மேற்கண்ட கடை உரிமதாரர் திரு.கே.மணி அவர்கள் உடல் நலம் சரியில்லாத காரணத்தால் அவருடன் கூட்டாக உடன் பணிபுரிந்து வந்த திரு.தினேஷ் அவர்களின் பெயருக்கு உரிமம் பெயர் மாற்றம் செய்து தரும்படி கோரியுள்ளனர்.

மேலும் மேற்கண்ட கடைக்கு ஒரு வருட வாடகை கூடுதல் வைப்புத்தொகையும் மற்றும் கடைக்கும் பெயர் மற்ற கட்டணமாக ரூ.2500/- செலுத்தி பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1.அரசு அணை ( நிலை ) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 ன்படி ஒரு முறை மட்டுமே பெயர் மாற்றம் செய்யலாம்

2. நிர்வாக நலன் கருதி நகராட்சிக்கு இழப்பு ஏற்படா வண்ணம் பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2403/2022/அ1

தீர்மானம் எண் : 514

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

11 மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலைய வளாகத்தில் பணியாளர் குடியிருக்கும் கட்டிடம் பங்களாமேடு நீருந்து நிலைய வளாகத்தில் பணியாளர் குடியிருக்கும் கட்டிடம் மற்றும் பேருந்து நிலைய பொதுக்கழிப்பிடம் ஆகிய கட்டிடங்களுக்கு புதிய மின் இணைப்பு பெறப்பட வேண்டும். மின் இணைப்பு பெறுவதற்கு மின்மானி பெட்டி பொருத்த தேவையான மின் ஒயரிங் மற்றும் மின் இணைப்பு வழங்க மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் ஆகியவற்றிற்கு உத்தேச செலவு ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

நகராட்சி குடியிருப்பில் பணியாளர்கள் மின் கட்டணம் செலவினம் பொருட்டு அவசர அவசியம் கருதி. மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 4956/2022/இ1

தீர்மானம் எண் : 515

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதைச் சாலை 1.1.2020 முதல் திரு.ஜாபர்சாதிக் என்பவர் குத்தகை உரிமம் பெற்று நடத்திவந்தார் 31.12.2022 ன் 3 ஆண்டுகள் முடிவடைவதால் ஏலத்திற்கு கொண்டு வருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் : 516

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2022-2023 ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 20.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்த்தாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 27 கே.கே.நகர் சென்டரல் கோ.ஆப்ரேடிவ் பேங்க் அருகில் சிறுபாலம் அமைத்தல் | ரூ.3.00 இலட்சம் | திரு.எம்.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.93% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண் 16 எம்.எஸ்.ஆர் புரம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்நல மைய ஆரோக்கிய மையத்தில் கூடுதல் வசிதகள் செய்தல். | ரூ.4.00 இலட்சம் | திரு.டி.ராதாகிருஷ்ணன் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.வி.செல்வராஜ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண். 1653/2022/இ1

தீர்மானம் எண் : 517

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

14 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 மகாதேவபுரம் ரயில்வே கேட் அருகில் மற்றும் வார்டு எண்.20 விளையாட்டு மாரியம்மன் கோவில் அருகில் பம்பிங்மெயின் உடைப்பு சரி செய்யவும், வார்டு எண்:19 மகாதேவபுரம் மெயின்ரோட்டில் குடிநீர்க் குழாய் இண்டர்லிங் செய்யவும் வார்டு எண்:30 பெருமாள் வீதியில் பகிர்மானக் குழாய்கள் பராமரிப்பு செய்யவும் மற்றும் தார்சாலை அமைக்கும் இடங்களில் அவ்வப்போது உடைப்பு ஏற்படும் வீட்டு இணைப்புகளை சரி செய்யவும் ஆகும். உத்தேச செலவினம் ரூ.5,00,000 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1651/2022/இ1

தீர்மானம் எண் : 518

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

15 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்10 TAN INDIA காலனி பகுதியில் தண்ணீர் வசதி ஏற்படுத்திட வேண்டியுள்ளது. எனவே இப்பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் பதித்து மேடை கட்டி PVC தொட்டி பொருந்தி தண்ணீர் வசதி ஏற்படுத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி இச்செலவினத்தை மன்றத்தின் குடிநீர் நிதியின் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண். 1651/2022/இ1

தீர்மானம் எண் : 519

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

16 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 31 கே.கே.நகர் மற்றும் தண்டு மாரியம்மன் கோவில் பகுதிகள் தண்ணீர் வசதி ஏற்படுத்திட வேண்டியுள்ளது. எனவே கே.கே.நகர் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் பதித்து மேடை கட்டி PVC தொட்டி பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.90 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண். 1651/2022/இ1

தீர்மானம் எண் : 520

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

<table>
<tr><td>17</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2022-2023 ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 20.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விழுக்காடு %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 மகாதேவபுரம் ரயில்வே கேட் அருகில் மற்றும் வார்டு எண்.20 விளையாட்டு மாரியம்மன் கோவில் அருகில் பம்பிங்மெயின் உடைப்பு சரி செய்யவும், வார்டு எண்:19 மகாதேவபுரம் மெயின்ரோட்டில் குடிநீர்க் குழாய் இண்டர்லிங் செய்யவும் வார்டு எண்:30 பெருமாள் வீதியில் பகிர்மானக் குழாய்கள் பராமரிப்பு செய்யவும் மற்றும் தார்சாலை அமைக்கும் இடங்களில் அவ்வப்போது உடைப்பு ஏற்படும் வீட்டு இணைப்புகளை சரி செய்யவும் ஆகும். உத்தேச செலவினம் ரூ.5,00,000 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">ரூ.5.00 இலட்சம்</td><td>திரு.எம்.வேலுசாமி</td><td>0.02% மதிப்பீட்டில் குறைவு</td></tr>
<tr><td>திரு.சி.நாகராஜ்</td><td>4.98% மதிப்பீட்டில் அதிகம்</td></tr>
</table>

மேற்க்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.வேலுசாமி அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண். 1651/2022/இ1

**தீர்மானம் எண்** : 521

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td>18</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2022-2023 ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 20-12-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விழுக்காடு %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் கணினி அறையின் அருகில் புதியதாக கேமரா கணினி மற்றும் தொடுதிரை மற்றும் அதற்கு தேவையான ஒயரிங் மற்றும் அனைத்து உபகரணங்கள் வாங்குதல்</td><td rowspan="2">ரூ.3.20</td><td>திருவாளர். Sagar Electronics</td><td>0.53% மதிப்பீட்டில் குறைவு</td></tr>
<tr><td>திருவாளர். Syscon Electronics</td><td>5.13% மதிப்பீட்டில் அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் தற்போது வரிவசூல் நடைபெறும் பொருட்டு தற்போது உள்ள டி.வி.எஸ் டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர் இரண்டு எண்கள் உள்ளது. அதில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் வரி வசூல் பாதிக்கப்படுகிறது. ஆதலால் இனி வரும் காலங்களில் வரி வசூல் தீவிரப்படுத்துவதால் பிரிண்டர்கள் பழுதானதை சரி செய்ய காலதாமதம் ஆவதால் புதிகாக இரண்டு எண்கள் பிரிணடர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/-க்கு பணி மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">ரூ.0.50</td><td>திருவாளர். Sagar Electronics</td><td>0.48% மதிப்பீட்டில் குறைவு</td></tr>
<tr><td>திருவாளர். Syscon Electronics</td><td>4.99% மதிப்பீட்டில் அதிகம்</td></tr>
</table></td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சி UGD திட்டப் பணிக்கு 2 கணினி 1 பிரிண்டர் மற்றும் நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான ஜெராக்ஸ் மிஷின் 1, டோனர் 10 மற்றும் அதற்குத் தேவையான மின் உதிரி பாகங்கள், கேபிள்கள், நெட் ஒர்க் சார்ந்த உபகரணங்கள் வாங்கி இயக்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளுதல். | ரூ.7.00 | திருவாளர். Sagar Electronics | 0.51% மதிப்பீட்டில் குறைவு |
| | | | திருவாளர். Syscon Electronics | 5.05% மதிப்பீட்டில் அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண். 1653/2022/இ1

தீர்மானம் எண் : 522

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

19 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் : 32 நகர் மன்றத்துணைத் தலைவர் திருமதி.மு.அருள்வடிவு மற்றும் வார்டு எண் : 27 நகர் மன்ற உறுப்பினர் திரு.ஓ.ஆர்.நடராஜன் அவர்களின் பகுதியில் ஏற்கனவே அரசால் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தாலும், கூட்டுறவுத் துறையாலும், ஏற்படுத்தப்பட்டது. இப்பகுதி தற்போது முழு அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இந்த குடியிருப்பு மனைப்பிரிவுகள் உருவாக்கப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆன நிலையில் தற்போது சில பகுதிகள் வணிக பயன்பாடாக கட்டிட உரிமையாளர்களால் மாற்றம் செய்யப்பட்டு தற்போது வணிக பயன்பாடாக இருந்து வருகிறது. இது குறித்து பல்வேறு புகார்கள் வந்த வண்ணம் உள்ள நிலையில் கட்டிட உரிமையாளர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் பொது நலனை கருத்தில் கொண்டும், பொதுமக்களின் வாழ்வாதாரத்தினைக் கருத்தில் கொண்டும் மேற்குறிப்பிட்ட குடியிருப்பு மனைப் பகுதியில் உள்ள நிலப்பயன்பாட்டை (Land Classification) குடியிருப்பில் இருந்து வணிக பயன்பாடாக (Residential to Commercial) மாற்றித்தர மேட்டுப்பாளையம் முழுமைத்திட்டத்தில் (Master Plan) மாற்றம் செய்து தர அரசைக் கேட்டுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் : 523

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

20 மேட்டுப்பாளையம் நகராட்சியில் மணி நகர் பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அறிவுசார் மையம் கட்ட அரசு உத்திரவின் பேரில் நகர்மன்றத் தீர்மானம் எண்.416, நாள் : 29.07.2022 தீர்மானத்தின் படி பணிகள் துவங்கப்பட்ட போது திரு.எம்.வீரகுமார் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No: 32223/2022 வழக்கு தொடர்ந்ததை அடுத்து வழக்கு நடைபெற்றது. இவ்வழக்கு கடந்த 01.12.2022 அன்று நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கில் நகராட்சி சார்பாக திரு.பி.முத்துகுமார் மாநில அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்தினர். தற்போது வழக்கில் ஆஜராகியதற்கான தொகை ரூ.25000/- வழங்க வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே மேற்கண்ட வழக்கு கட்டணம் ரூ.25,000/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நீதிமன்ற வழக்கின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானம் எண் : 524

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

21 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.17 இராஜபுரம் பகுதியில் உள்ள நகராட்சி மயானத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏதுவாக பொதுநிதியில் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 525

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

<table>
<tr><td>22</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து மயானங்களிலும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இப்பணியினை பொது நிதியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 526<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td>23</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியிலுள்ள 33 வார்டுகளிலும் JCB வாகனம் மூலம் தூய்மைப் பணி மற்றும் சாக்கடை சேறு அகற்றும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, வார்டு எண்: 1 முதல் 11 வரை ரூ.5.00 இலட்சம், வார்டு எண்: 12 முதல் 22 வரை ரூ.5.00 இலட்சம், வார்டு எண்: 23 முதல் 33 வரை ரூ.5.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.15.00 இலட்சத்திற்கு JCB வாகனம் வாடகைக்கு அமர்த்தி பொதுநிதியில் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 527<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td>24</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40 M 9703 TATA ACE (Mini Tipper) வாகனத்திற்கு கீழ்க்கண்ட தகுதிச் சான்று பெற தானியங்கிப் பொறியாளர் அரசு தானியங்கிப் பணிமனை,கோவை அவர்கள் வாகனத்தை ஆய்வு செய்து பழுதுகளை சரிபார்க்கும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எ ண்.</th><th>பழுதுகள் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>வாகனம் முழுவதும் பெயிண்ட் (வர்ணம்) அடித்து எழுத்துக்கள் மற்றும் ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும்</td></tr>
<tr><td>2.</td><td>நான்கு வீல் பேரிங் செக்கப் செய்து பிரேக் O/H செய்ய வேண்டும்</td></tr>
<tr><td>3.</td><td>ஜாயிண்ட் யோக் & டீத் புதியது மாற்றி "U." "J" Cross மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>4.</td><td>கிளட்சி O/H செய்ய வேண்டும்</td></tr>
<tr><td>5.</td><td>என்ஜின் ஆயில், ஆயில் பில்டர், ஏர் பிலிடர், டீசல் பில்டர் மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>6.</td><td>கியர்பாக்ஸ் மற்றும் கிரவுன் ஆயில் மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>7</td><td>வாகனத்தில் எலக்ட்ரிக்கல் வேலை செய்ய வேண்டும்</td></tr>
<tr><td>8</td><td>கியர்ராடு புஷ் கிட்கள் மாற்றி RC மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>9</td><td>நான்கு வீல் ஸ்பிரிங்குகள் சுழற்றி RC செய்து பின் மற்றும் புஷ்கள் மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>10</td><td>ஹீட்டர் பிளக்குகள் மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>11</td><td>செல்ப்மோட்டார் மற்றும் ஆல்டர்னேட்டர் O/H செய்ய வேண்டும்</td></tr>
<tr><td>12</td><td>ஸ்டேரிங் பாக்ஸ் O/H செய்ய வேண்டும்</td></tr>
<tr><td>13</td><td>டைராய்டு எண்டு புதியது மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>14</td><td>கேபின் டோர் லாக் புதியது மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>15</td><td>ஹைட்ராலிக் சர்வீஸ் செய்து ஆயில் மாற்றம் வேண்டும்</td></tr>
<tr><td>16</td><td>டிப்பர் பிளாட்பார்ம் சீட் மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>17</td><td>பேட்டரி புதியது மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>18</td><td>நான்கு டயர் டியூப் புதியது மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>19</td><td>சைலென்சர் புதியது மாற்ற வேண்டும்</td></tr>
<tr><td>20</td><td>இதர பணிகள்</td></tr>
</table>
<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 528<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

25 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40 M 9694 TATA ACE (Mini Tipper) வாகனத்திற்கு கீழ்க்கண்ட தகுதிச் சான்று பெற தானியங்கிப் பொறியாளர் அரசு தானியங்கிப் பணிமனை,கோவை அவர்கள் வாகனத்தை ஆய்வு செய்து பழுதுகளை சரிபார்க்கும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,15,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பழுதுகள் விபரம் |
|---|---|
| 1. | கியர் பாக்ஸ் O/H செய்ய வேண்டும் |
| 2. | கிளட்ச் O/H செய்ய வேண்டும் |
| 3. | என்ஜின் ஆயில், ஆயில் பில்டர், ஏர் பில்டர், டீசல் பில்டர் மாற்றி சர்வீஸ் செய்து, கிரவுன் ஆயில், கியர் பாக்ஸ் ஆயில் மாற்ற வேண்டும் |
| 4. | நான்கு ஸ்பிங்குகள் R/C செய்து, பின் மற்றும் புஷ்கள் மாற்ற வேண்டும் |
| 5. | செல்ப் மோட்டார் மற்றும் ஆல்டர்னேட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும் |
| 6. | ரேடியேட்டர் O/H செய்து கூலண்டு ஆயில் மாற்ற வேண்டும் |
| 7 | ஜாயின்ட் யோக் மற்றும் டீத் மாற்றி "U" . "J" Cross புதியது மாற்ற வேண்டும் |
| 8 | எலக்ட்ரிக்கல் முழுவதும் செக்கப் செய்ய வேணடும் |
| 9 | பாடி பின்புற தொட்டியில் அடிப்பக்க பிளாட்பார்ம் சீட் (மெட்டல்) மாற்ற வேண்டும் |
| 10 | ரியர்பம்பர் புதியது மாற்ற வேண்டும் |
| 11 | டோர் லாக் புதியது மாற்ற வேண்டும் |
| 12 | கிங் பின் O/H செய்ய வேண்டும் |
| 13 | ஹைட்ராலிக் சர்வீஸ் செய்து ஆயில் மாற்ற வேண்டும் |
| 14 | வாகனம் முழுவதும் பெயிண்ட்(வர்ணம்) அடித்து ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் |
| 15 | வாகனத்தில் கேபினில் FR கிளாஸ் (வின்ஸ்கிரின்) கிளாஸ்க்கு மேற்புறம் டிங்கரிங் வேலை செய்து கிளாஸ் பீடிங்க மாற்ற வேண்டும் |
| 16 | நான்கு வீல் பேரிங் செக்கப் செய்து பிரேக் O/H செய்ய வேண்டும் |
| 17 | சைலென்ஸர் புதியது மாற்ற வேண்டும் |
| 18 | இதர பணிகள் |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 529

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 26 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40க் B 1497 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதிச் சான்று பெற தானியங்கிப் பொறியாளர், அரசு தானியங்கிப் பணிமனை,கோவை அவர்கள் வாகனத்தை ஆய்வு செய்து கீழ்க்கண்ட பழுதுகளை சரிபார்க்கும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,75,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண். | பழுதுகள் விபரம் |
|---|---|
| 1. | ரேடியேட்டர் O/H செய்ய வேண்டும் |
| 2. | வாட்டர் பம்ப் அசெம்பளி புதியது மாற்ற வேண்டும் |
| 3. | நான்கு வீல் பிரேக் O/H செய்ய வேண்டும் மற்றும் நான்கு வீல் பேரிங் செக்கப் செய்ய வேண்டும் |
| 4. | நான்கு ரோடு ஸ்பிரிங்குகள் R/C செய்து பின் மற்றும் புஷ்கள் புதியது மாற்ற வேண்டும் |
| 5. | பிளாட் பார்ம் பேட்ச ஒர்க் செய்து, பம்பர் முன்புறம் (ம) பின்புறம் பேட்ச ஒர்க் செய்ய வேண்டும் |
| 6. | சேப்டி பம்பர் R/C செய்ய வேண்டும் |
| 7 | **கேபின் டோர் லாக் புதியது மாறறி பேட்ச் ஒர்க் செய்து லிப்ட் மெஷின் சரிசெய்து டோர் கிளாஸ் புதியது மாற்ற வேண்டும்** |
| 8 | டிரைவர் சீட்(ம) கிளீனர் சீட் பழுது சரி செய்ய வேண்டும் |
| 9 | செல்ப் மோட்டார், ஆல்டர்னேட்டல் O/H செய்ய வேண்டும் |
| 10 | கிளட்ச் O/H செய்ய வேண்டும் |
| 11 | கியர் பாக்ஸ் O/H செய்ய வேண்டும் |
| 12 | பிரேக் பெடல் (ம) கிளட்ச் பெடல் R/C செய்ய வேண்டும் |
| 13 | Vacuum drying. Vacuum Booster O/H செய்ய வேண்டும் |
| 14 | கிங்பின் (ம) டைராடு எண்ட் செக்கப் செய்ய வேண்டும் |
| 15 | ஜாயிண்ட் (ம) சென்டர் ஜாயிண்ட் செக்கப் செய்ய வேண்டும் |
| 16 | RIV Mirror இடது (ம) வலது புதியது மாற்ற வேண்டும் |
| 17 | ஸ்பீடு கவர்னர் சரி செய்ய வேண்டும் |
| 18 | வாகனம் முழுவதும் வர்ணம் பூசி, எழுத்துகள் எழுத வேண்டும் |
| 19 | ஸ்டிக்கர்கள் ஒட்ட வேண்டும் |
| 20 | ஆல் லைட்ஸ் மற்றும் வயர்கள் செக்கப் செய்ய வேண்டும் |
| 21 | ஹைட்ராலிக் சிலிண்டர் ஆயில் லாக் சரி செய்ய வேண்டும் |
| 22 | பெட்டி தூக்கும் செயின் மற்றும் பெட் புதியது மாற்ற வேண்டும் |
| 23 | ப்யூவல் இன்ஜக்ஷன் பம்பு மற்றும் நாகில் செக்கப் செய்ய வேண்டும் |
| 24 | டர்போ சார்ஜர் O/H செய்ய வேண்டும் |
| 25 | என்ஜின் ஆய்ல்/கியர் ஆயீல்,, கிரவுன் ஆயில் மற்றும் பில்டர்கள் புதியது மாற்ற வேண்டும் |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 530

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 27 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40F 2273 (Septic Tanker Lorry) மற்றும் TN40P 1320 ஆகிய இரண்டு வாகனங்களுக்கு பெர்மிட் காலம் முடிவடைந்துள்ளதால், அதனை புதுப்பிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 531<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 28 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் (SBM) தூய்மை இந்தியா இயக்கத்தின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினல் Star Raing xஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர், அதன் ஒரு பகுதிகாய மேட்டுப்பாளையம் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம்பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் Secondary Storage and Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.<br>இதில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் பொது மக்கள் தங்கள் கருத்தனை தெரிவிக்க ஏதுவாக ஒரு தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது, எனவே நாளிதழில் பிரசுரம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள PRO அலுவலகம் மூலமாக தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய ஆகும் தோராயமான செலவின தொகை ரூ.,10000/-ற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 532<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 29 | இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லா பகுதிகளாக அறிவிப்பு செய்ய தேவையான அனைத்து நடவடிக்கையும் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக ODF + சான்று பெற வேண்டியுள்ளது. இதில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் பொது மக்கள் தங்கள் கருத்தினை தெரிவிக்க ஏதுவாக ஒரு தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது, எனவே நாளிதழில் பிரசுரம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள PRO அலுவலகம் மூலமாக தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய ஆகும் தோராயமான செலவின தொகை ரூ.,10000/-ற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 533<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |